செ. கு. எண்: 188 நாள்: 01.11.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 01.11.2018

விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டம், பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டம், பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து **2.11.2018 முதல் 28.2.2019** வரை அணைகளின் நீர் இருப்பு, நீர் வரத்து மற்றும் நீர்த் தேவை அடிப்படையில் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கண்மாய்களின் மூலம் 236.01 ஹெக்டேர் நிலங்களும், நேரடி பாசன கால்வாய் மூலம் 92.84 ஹெக்டேர் நிலங்களும், ஆக மொத்தம் **328.85 ஹெக்டேர்** பாசன நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**